## சிறப்பு தலைப்பு ஏராளம் (*perisseuō)*
## SPECIAL TOPIC: ABOUND (perisseuō)

பவுல் பெரும்பாலும் இந்த வார்த்தையை பயன்படுத்துகிறார். இது அதிகப்படியாக நிரப்புவதைக் குறிக்கிறது (உதாரணமாக , ஒரு நேர்மறையான உணர்வு).

1. தேவனின் சத்தியம் அவருடைய மகிமைக்கு அதிகப்படியாக நிரம்பியிருக்கிறது, ரோமர். 3: 7
2. இயேசுகிறிஸ்து என்னும் ஒரே மனுஷனுடைய கிருபையினாலே வரும் ஈவும் அநேகர்மேல் அதிகமாய்ப் பெருகியிருக்கிறது. ரோ. 5:15
3. விசுவாசிகள் நம்பிக்கையில் பெருகி இருக்கிறார்கள், ரோ. 15:13
4. விசுவாசிகள் சில உணவுகளை சாப்பிடுவதன் மூலமோ அல்லது சாப்பிடாமலோ தேவனை மேன்மைப் பாராட்டுவதில்லை, 1 கொரி. 8: 8 (ஒ.பா. மாற்கு 7: 15,17-23)
5. விசுவாசிகள் சபையை கட்டியெழுப்புவதில் ஏராளமாக உள்ளனர், 1 கொரி. 14:12
6. விசுவாசிகள் கர்த்தருடைய ஊழியத்தில் பெருகுகிறார்கள், 1 கொரி. 15:58
7. விசுவாசிகள் கிறிஸ்துவின் துன்பத்திலும், கிறிஸ்துவின் ஆறுதலிலும் ஏராளமாகப் பங்கு கொள்கிறார்கள், 2 கொரி. 1: 5
8. நீதியைக் கொடுக்கும் ஊழியம் மகிமையில் நிறைந்துள்ளது, 2 கொரி. 3: 9
9. விசுவாசிகளின் ஸ்தோத்திரத்தினாலே தேவனின் மகிமைப் பெருகும், 2 கொரி. 4:15
10. விசுவாசிகளின் ஏராளமான சந்தோஷம், 2 கொ. 8: 2
11. விசுவாசிகள் எல்லாவற்றிலும் (விசுவாசம், சொல், அறிவு, ஆர்வம், அன்பு) ஏராளமாக பெருகி இருந்தார்கள், எருசலேம் தேவாலயத்திற்கான தர்மகாரியத்திலும் பெருகவேண்டும் , 2 கொரி. 8: 7
12. சகலவித கிருபையையும் பெருகி இருக்கிறது, 2 கொரி. 9: 8
13. அநேக விசுவாசிகள் தேவனை ஸ்தோத்திரிப்பதினாலே, 2 கொரி. 9:12
14. தேவனுடைய கிருபையின் ஐசுவரியத்தை விசுவாசிகளிடத்தில் பெருகப்பண்ணினார், எபே. 1: 8
15. விசுவாசிகளின் அன்பு இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும், பிலி. 1: 9
16. விசுவாசிகளின் பவுல் மீதான நம்பிக்கை கிறிஸ்துவில் நிறைந்துள்ளது, பிலி. 1:26
17. ஏராளமாக இருப்பது, பில். 4: 12,18
18. விசுவாசிகள் ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக, கொலோ 2: 7
19. விசுவாசிகள் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துகிறார்கள், பெருகுகிறார்கள், 1 தெச. 3:12
20. தேவபக்தியுள்ள வாழ்க்கை முறையில் அதிகமதிகமாய்த் தேறும்படிக்கு, 1 தெச. 4: 1
21. சக விசுவாசிகள் மீது அன்பு பெருக, 1 தெச. 4:10

கிறிஸ்துவுக்குள் தேவனின் கிருபையைப் பற்றிய பவுலின் புரிதல் "மிகவும் அதிகமாய்" இருந்தது. எனவே, விசுவாசிகள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் "மிகவும் அதிகமான" கிருபையிலும் அன்பிலும் நடக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது!

Copyright © 2014 Bible Lessons International